Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 42

சனிக்கிழமை 07 ஜனவரி 2023

மார்கழி 23 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில்

# கூட்டமைப்பின் முன்மொழிவு சாதகமாகப் பரிசீலிக்கப்படும்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 7**

**இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும். சர்வகட்சிப் பேச்சு சரியான திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று உதயனிடம் தெரிவித்தார்.**

»11



உள்ளூராட்சித் தேர்தல்

## முன்னிலை சோஷலிசக் கட்சி களமிறங்குவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 7

உள்ளூராட்சித் தேர்தலில் குமார் குணரத்னம் தலைமையிலான முன்னிலை சோஷலிசக் கட்சியும் களமிறங்கவுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் அந்தக் கட்சி போட்டியிடவுள்ளது. முன்னிலை சோஷலிசக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்சி உள்ளாட்சித் தேர்தலொன்றில் போட்டியிடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். போராட்டக்காரர்கள் பலர் முன்னிலை சோஷலிசக் கட்சியின் சார்பில் போட்டியிடு

»11

வவுனியாவில்

## ஐ.ம.ச. வேட்பாளர்களின் மக்கள் சந்திப்பு நேற்று!

வவுனியா, ஜன. 7

உள்ளூராட்சித் தேர்தலுக்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களையும் பொதுமக்களையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோரே இந்தச் சந்திப்புக்களில் ஈடுபட்டனர். இவர்கள் அடுத்தடுத்த நாள்களில் வடக்குமாகாணம் தழுவிய ரீதியில் சுற்றுப் பயணங்களையும் சந்திப்புக்களையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-18)

## மூன்று நாள்கள் வடக்கில் மழை

யாழ்., ஜன. 7

வடக்கு மாகாணத்தில் இன்றுமுதல் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இது தொடர்

»11

உள்ளூராட்சித் தேர்தல்

## வேறுபட்ட நிலைப்பாட்டை கைவிட்டு சகலரும் ஒன்றித்துச் செயற்படுங்கள்

ஜனாதிபதி அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 7

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்தொடர்பில் வெவ்வேறான நிலைப்பாடுகளை கொண்டிருக்காமல், பெரும்பான்மையான ஆதரவுடன் ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையில் செயற்படுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

»11

## இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு இம்மாதம் வருகை!

கொழும்பு, ஜன. 7

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுக்களுக்காக இந்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், இந்தப் பயணத்துக்கான திகதிகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகைதருவது

»11



## அரியாலையில் நேற்று கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை, குசவம்பலம் வீதியில் கைக்குண்டு காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-20)

## மயங்கி வீழ்ந்த பெண் இறப்பு!

யாழ்., ஜன. 7

சமுர்த்தி வங்கிக்குச் சென்றுவிட்டுதிரும்பி வந்துகொண்டிருந்த போது மயக்கமடைந்து வீழ்ந்த பெண் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். கைதடி கிழக்கைச் சேர்ந்த செல்லன் சரோஜா (வயது - 58) என்றபெண்ணே இவ்வாறு

»11

## ஜெலி மீன் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

ஜெலி மீன் தாக்கியதையடுத்து சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் நேற்று உயிரிழந்தார். குருநகர் பகுதியைச் சேர்ந்த அல்ஜின் ஜெனிராஜ் (வயது -52) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

இவர், பண்ணைக் கடற்கரையில் இறால் பிடிப்பதற்காக கடந்த செப்ரெம்பர் மாதம் 9 ஆம்

»11

## யாழ். சர்வதேசத் திரைப்படவிழா யாழ்ப்பாணத்துக்கு உரியதல்லவாம்

அதன் ஒருங்கிணைப்பாளர் எகத்தாளம்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவானது யாழ்ப்பாணத்தவர்களுக்குரியது இல்லை என்று அதன் ஒருங்கிணைப்பாளரான அனோமா தெரிவித்துள்ளார். 'யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா' யாழ்ப்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், 'இலங்கை தமிழ் சினிமா நேற்று, இன்று, நாளை' எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட ஒரு

»11



noolaham.org | aavanaham.org

# மதமோதல் தூண்டப்படின் தண்டனை கடுமையாகும்

## நீதியமைச்சர் காட்டம்

கொழும்பு, ஜன. 7

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களுக்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும் இந்தத் தருணத்தில் மதநல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முனைவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

புனித தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில், சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள கருத்து தொடர்பில் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புனித தலதா மாளிகை என்பது இலங்கையர்களுக்கு மாத்திரமல்ல உலகம் முழுவதும் வாழும் பௌத்த மக்களின் அடையாளம்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், சேபால் அமரசிங்க என்பவர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு தலதா மாளிகையை அவமானப்படுத்தியுள்ளார். இதன் காரணமாக, பௌத்த உயர்பீடமும், பௌத்த மக்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர்.

இலங்கை அரசமைப்பின்படி ஒருவர், தம்மை நாத்திகன் என்று கூற உரிமை உண்டு. மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம். நாட்டில் மத மோதலை ஏற்படுத்தல், மத நிந்தனை என்பவற்றுக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் விதிக்கமுடியும்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு தற்போது முயற்சிக்கும் இந்தத் தருணத்தில் நாட்டில் மத மோதலை ஏற்படுத்த தூண்டப்படுகிறது. அவருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.

இதுகுறித்து கருத்துவெளியிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகையில்;

சேபால் அமரசிங்க என்பவர் கோத்தாபய ராஜபக்ச அரசில் கூட்டுத்தாபனம் ஒன்றின் தலைவராக இருந்தார். இது அரசின் ஒரு கிளர்ச்சி முயற்சியாக இருக்கமுடியும்" - என்றார்.

இதனை மறுத்த, அமைச்சர் மஹிந்த அமரவீர, "அப்படியான ஒருவர் எந்தவொரு கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் செயற்படவில்லை. அவருக்குக் காலிமுகத்திடல் போராட்டத்துடன் தொடர்பு இருக்கலாம் என்பதே எனது கருத்து" - என்றார். (ச-22)

### போதைப்பொருள் கொள்வனவு

## பணம் செலுத்த தாமதித்ததால் கடத்திச் செல்லப்பட்ட சிறுவன்

கொழும்பு, ஜன. 7

உயிர்கொல்லி போதைப்பொருள் கொள்வனவு செய்த பின்னர் அதற்கான பணம் செலுத்த தாமதமானதால் சிறுவன் ஒருவனைக் கடத்திச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நீர்கொழும்பில் பதிவாகியுள்ளது. நீர்கொழும்பிலுள்ள வர்த்தகர் ஒருவரின் மகன் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

வர்த்தகத்துக்காக அவர் கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள பெண் ஒருவரிடம் போதைப்பொருள்களை கொள்வனவு செய்துள்ளார். அதற்காக செலுத்த வேண்டிய பணம் தாமதமானதன் காரணமாக குறித்த பெண், வர்த்தகரின் 10 வயதான பேரனைக் கடத்திச் சென்று, கிராண்ட்பாஸ் ரந்திய உயன பகுதியிலுள்ள வீடமைப்புத் தொகுதியில் தடுத்து வைத்துள்ளார். அதன்பின்னர் வர்த்தகரைத் தொடர்புகொண்டு அவரது மகன் பெற்றுக்கொண்ட போதைப்பொருளுக்கான பணத்தை செலுத்துமாறு கோரியுள்ளார்.

இந்த நிலையில் கிராண்ட்பாஸ் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சிறுவன் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று சிறுவனை பாதுகாப்பாக மீட்டனர்.

அதனையடுத்து சிறுவனைக் கடத்தியதாகக் கூறப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் கைது செய்யப்பட்டார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-இ)

## கர்நாடகாவில் 38 ஈழஅகதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டம்!

கொழும்பு, ஜன. 7

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் இலங்கை அகதிகள் 38 பேர் நேற்று தொடக்கம் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கனடாவுக்கு செல்வதற்காக முகவர்களால் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பரிதவிக்கவிடப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்று உத்தரவு வழங்கியபோதிலும் தம்மை திருப்பியனுப்புவதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தே அவர்கள் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் உணவு, மருத்துவ வசதியின்றி விடுதியொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதால் கடும் நோய்த்தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளோம். எமது இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் வலியுறுத்தினர். (ச-19)

## மேலும் பல பொருள்களின் இறக்குமதிக்கு தடைவிதிப்பு!

### வெளியானது வர்த்தமானி

கொழும்பு, ஜன. 7

இறக்குமதி செய்யப்படும் மேலும் பல வகையான பொருள்களை தற்காலிகமாக தடைசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளை உள்ளடக்கி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது.

தற்காலிக தடை விதிக்கப்படும் பொருள்களாக, தக்காளி, லீக்ஸ், பூசணி, இனிப்பு உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வெள்ளரிகள், பீன்ஸ் மற்றும் கீரைகள் உள்ளிட்ட காய்கறிகள், கொய்யா, மாம்பழம், முலாம்பழம், அவகேடோ, ஸ்ட்ராபெர்ரி உள்ளிட்ட பழங்கள், பூக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள், பப்படம், பழுப்பு அரிசி, குரக்கன் மற்றும் தொடர்புடைய பொருள்கள், பேரிச்சம்பழம், பச்சை பட்டாணி, முந்திரி, சோயாபீன், தேங்காய், ஷாம்புகள், கண்டிஷனர்கள் மற்றும் சாயங்கள், பவுடர்கள், உதட்டுச்சாயம், கண் கிரீம்கள், வாசனைத் திரவியங்கள், ஆண்கள் உடைகள், பெண்கள் கடிகாரங்கள், ஆடைகள், பாதணிகள், தோல் மற்றும் றப்பர் தொடர்பான பொருள்கள், மட்பாண்டங்கள் மற்றும் சமையலறை பொருள்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. (ச-இ)



## கரைச்சிப் பிரதேசசபையால் வாகன சுத்திகரிப்பு நிலையம்

கிளிநொச்சி, ஜன. 7

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையால் 25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சபைக்கான வாகன சுத்திகரிப்பு நிலையம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சத்தியராகவன், சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தனர்.

சுமார் 36 வாகனங்களை பராமரித்தல், தூய்மைப்படுத்தல் என்பவற்றுக்கு ஏற்பட்ட அதிகமான செலவினங்களை குறைக்கும் முகமாக இந்த நவீன சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டது.

இதன்மூலம் சபை செலவீனங்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் ஏனைய அரச நிறுவனங்கள் கோரிக்கை விடுத்தால் சேவை வழங்க முடியும் எனவும் தவிசாளர் குறிப்பிட்டார். (ச-113)

## உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கும் ஆதிவாசிகள்

கொழும்பு, ஜன. 7

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் களமிறங்குவதற்கு ஆதிவாசிகள் திட்டமிட்டுள்ளனர்.

சுயாதீனமாக போட்டியிடுவதா அல்லது தமது பிரதிநிதிகளை கட்சிகளின் சார்பில் களமிறக்குவதா என்பது தொடர்பில் இன்னும் ஓரிரு நாள்களுக்குள் முடிவெடுத்த பின்னர், அது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஆதிவாசிகளின் சார்பில் அரசியல் கட்சியொன்றை பதிவுசெய்வதற்கான நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது. (ஒ-14-44)

## சட்டவிரோத கடலட்டை; 9 சந்தேகநபர்கள் கைது!

மன்னார் அச்சங்குளம் கடற்பகுதியில் சட்டவிரோதமாக கடலட்டைகள் பிடித்த குற்றச்சாட்டில் 9 சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 168 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டதோடு டைவிங் கியர், டிங்கி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட வங்காலை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்களையும் அவர்களது உடைமைகளையும் சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.



(ஒ-14-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.30 மணிக்கு வெளி வீதியில் எழுந்தருளினர். (ஒ-14)

# இரணைமடுக்குளத்தின் கீழான அறுவடைக்கு எரிபொருள் வழங்குக

## மாவட்டச்செயலரிடம் மனு கையளிப்பு

கிளிநொச்சி, ஜன. 7

இரணைமடுக்குளத்தின் கீழான அறுவடைக்கான எரிபொருளை வழங்குமாறும் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் கிளிநொச்சி மாவட்டச்செயலரிடம் மனு ஒன்றை நேற்றுமுன்தினம் கையளித்துள்ளனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டதாவது:- எதிர்வரும் 15 நாள்களில் கால போக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இதற்கான எரிபொருளைப் பெற்றுத் தர வேண்டும். கடந்த காலங்களில் அறுவடைக்கான எரிபொருளை விவசாயிகள் பெற்றுக் கொள்வதில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். ஆகையாலே அறுவடைக்கான எரிபொருளை பெற்றுத்தருமாறு கோருகின்றோம்.

அத்துடன் பல நெருக்கடிக்கு மத்தியில் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு நியாய விலை கிடைப்பதிலும் பிரச்சினை காணப்படுகின்றது.

எனவே அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை நியாயமான விலையில் விவசாயிகள் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஒ-14-13)

## இலவச குடிதண்ணீர் இணைப்பு விண்ணப்பத்தை அனுப்புங்கள்


கிளிநொச்சி, ஜன. 7

கரைச்சி பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளுக்கான இலவச குடிதண்ணீர் இணைப்புக்கான விண்ணப்பப்படிவத்தை அனுப்புமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் குடிநீர் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொன்னகர் கிராம மக்களுக்கான இலவச குடிதண்ணீர் விநியோகத்துக்கான நடமாடும் சேவையின்போது அலுவலர்கள் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று விண்ணப்பப் படிவங்களை வழங்கியிருந்தனர். ஆனால் சிலர் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து இதுவரை சமர்பிக்கவில்லை.

குடிநீர் விநியோகத் திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்யவேண்டியதால் தங்களுக்குரிய இலவச குடிதண்ணீர் இணைப்புக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று சமர்பிக்காதவர்கள் மற்றும் இதுவரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் கிளிநொச்சி ஏ-9 வீதி 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் விண்ணப்பப் படிவங்களை பெற்று எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்பட வேண்டும். அவ்வாறு கையளித்தால் மட்டுமே இலவச குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ஒ-14-214)

படங்கள்: ஐ.சிவசாந்தன்



நல்லூர் சிவன் கோயில் தேர்த்திருவிழா, ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று வெள்ளிக்கிழமை காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ஒ-14)

## ஒட்டுசுட்டானில் தொடரும் கொள்ளைச் சம்பவங்கள்

### நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜன. 7

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தனிமையில் இருக்கும் வயோதிபர்களின் வீடுகளை இலக்கு வைத்து கொள்ளையர்கள் பெறுமதியான நகைககள், பணங்களை கொள்ளையடித்து வருகின்றனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் சிவநகர் பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபரைக் கட்டிவைத்து வீட்டிலிருந்த பெறுமதியான நகை, பணங்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவும் ஒட்டுசுட்டான் நகரை அண்டிய பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிப தம்பதிகளின் வீட்டில் புகுந்த கொள்ளையர்கள், கணவன், மனைவி இருவரையும் மண்வெட்டிப் பிடியால் தாக்கிய பின் வீட்டிலிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 5 பவுண் நகை என்பவற்றைக் கொள்ளையடித்து சென்றனர். தாக்குதலில் காயமடைந்த முதியவர் ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே, கொள்ளையர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஒ-14-19)

## தன்னிச்சையாக சந்தையை மூடியதால் தொழிலில் நட்டம்

### மனித உரிமை ஆணைக்குழுவில் வியாபாரிகள் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட தண்ணீரூற்று பொதுச்சந்தையை முன்னறிவிப்பின்றி பூட்டியதால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என வியாபாரிகளால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுச்சந்தை முன்னறிவிப்பின்றிப் பூட்டப்பட்டதால், எமது அன்றைய வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ளது. சந்தையை குத்தகைக்கு எடுத்தவர்கள் அதிகளவவான வரியை விதிப்பதால் வியாபாரம் செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அத்துடன் சந்தையின் வாசலில் சோதனை சாவடி போல் வாகன மறியல் போடப்பட்டு வியாபாரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து எம்முடன் கலந்தாலோசிக்காது முன்னறிவிப்பின்றி வியாபார நிலையத்தையும் சந்தையையும் தன்னிச்சையாக பூட்டியதால் வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

தவிசாளரோ அல்லது பிரதேசசபையின் அதிகாரிகளோ எந்தத் தீர்வையும் இதுவரை வழங்கவில்லை என வியாபாரிகள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குத்தகைக்காரர்களும் வியாபாரிகளும் இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் பிரதேசசபையால் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன என தவிசாளர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 இல் தென்மராட்சியில் 209 பேர் டெங்கால் பாதிப்பு

சாவகச்சேரி, ஜன.7
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு 209 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன .
கடந்த 2021 ஆம் ஆண்டு கொரோனா அச்சம் காரணமாக 12 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த வருடத்தில் முதல் ஏழு மாதங்களில் மிகக் குறைந்த அளவில் காணப்பட்ட டெங்குத் தாக்கம் மழை பெய்த பின்னர் திடீரென அதிகரிக்கப்பட்டது.
பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் டெங்குத் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று திரும்பியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-14,9)

## நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்ட டிப்பரில் 116 கிலோ கஞ்சா மீட்பு

மன்னார், ஜன. 6
மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட டிப்பர் வாகனத்தில் சூட்சுமமான முறையில் பதுக்கிவைக்கப்பட்ட 116 கிலோகிராம் கேரளக்கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
கடந்த நவம்பர் மாதம் பொலிஸ் போதைப் பொருள் பணியகத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இந்த டிப்பரிலிருந்து கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.
அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
குறித்த டிப்பர் வாகனம் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டது.
இந்தநிலையில் அதே டிப்பர் வாகனத்துக்குள் சூட்சுமமான முறையில் பதுக்கிவைக்கப்பட்ட 116 கிலோகிராம் கேரளக்கஞ்சாவை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மன்னார் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)



## சோளச் செய்கை வயல் விழா

வவுனியா, ஜன. 7
வவுனியா காயங்குளம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட சோளச் செய்கைக்கான வயல்விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது சோளச் செய்கையால் கிடைக்கக் கூடிய பயன்கள், குறைந்த செலவில் அதிக இலாபத்தை ஈட்டும் வழிமுறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டன. அதன்பின்னர் சிறிய இயந்திரங்கள் ஊடாக மண்ணைப் பண்படுத்தும் முறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் அப்பகுதி மக்களுக்கு சோளச் செய்கை நன்மைகள் தொடர்பிலும் நோய்த் தாக்கங்கள் தொடர்பிலும் விளக்கம் கொடுக்கப்பட்டன.
நிகழ்வில் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பி. அற்புதசந்திரன், பாடவிதான உத்தியோகத்தர் அ. சுயேந்திரா, விவசாய போதனாசிரியர் அபிரான் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-14,110)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 7
கோப்பாய் வடக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-17)

யாழ்ப்பாணம், ஜன. 7
நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சிறப்பு பூசைகளுடன் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-17)


## இடமாற்றம்

சாவகச்சேரி, ஜன. 7
சாவகச்சேரி நகரசபையின் செயலாளராகக் கடமையாற்றிய சுப்பிரமணியம் சுபாஸ்கரன், மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதற்கமைய சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக கிளிநொச்சி மாகாண முகாமைத்துவப் பயிற்சி அலகில் பணிப்பாளராகக் கடமையாற்றிய சீராளன் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தொலைநகல் மூலம் இடமாற்றல் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.
இதேவேளை யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஓய்வு பெற்றதையடுத்து மன்னார் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றியவர், யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஓ-14,9)

## சங்க இலக்கிய வகுப்புகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன. 7
யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தால் சங்க இலக்கிய புதிய வகுப்புகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சிறாம்பியடியிலுள்ள சங்க மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.
வகுப்புகளில் புதிதாக இணைய விரும்புவோர் 021 2224550 மற்றும் 077 904 2490 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி பதிவு செய்யலாம் என சங்கச் செயலாளர் கு.ரஜீவன் அறிவித்துள்ளார். (ச-9)

## பேருந்தில் கசிப்பு; மூன்று பேர் கைது!



முல்லைத்தீவு, ஜன. 7
முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்றில் கசிப்பை மறைத்துக்கொண்டு வந்த 3 பேர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, அரியாலை மாம்பழம் சந்தியில் வைத்து குறித்த பேருந்தில் நெல் உமி மூடையில் நூதனமாக மறைத்துக் கொண்டு வரப்பட்ட கசிப்பு யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.
அதனையடுத்து கைது செய்யப்பட்டவர்களையும் சான்றுப் பொருள்களையும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-14-20)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை தேவை.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். பணவரவு மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படம். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம் :** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை நிறைவேறும்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"உங்களின் மிகப்பெரிய சொத்து நீங்கள் சம்பாதிக்கும் திறன். உங்களுடைய மிகப்பெரிய ஆதாரம் உங்கள் நேரம் "

– பிரையன் ட்ரேசி

## காலப்படிப்பா? தேர்தல் நடிப்பா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச தரப்பினருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் மாலை சந்திப்பு நடத்தியிருந்தனர். சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வெளிப்படுத்திய விடயங்களில் பொதுமைப்பாடு உள்ளது. 'அரசாங்கம் இழுக்கின்ற இழுப்புக்கெல்லாம், நாம் பின்னால் வரத் தயாரில்லை. சொன்னத்தை செய்யுங்கள். செய்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குக் குறைவாகவே உள்ளது. இதுவரை எதையும் செய்யவில்லை. இனியும் செய்யவில்லை என்றால் பேச்சுக்கு நாம் வரமாட்டோம்' என்ற செய்தியை மூவரும் வெவ்வேறு வார்த்தைகள் ஊடாகச் சொல்லியிருக்கின்றனர்.

'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' இவர்களது நிலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன. அவை வரவேற்கப்பட வேண்டியவை. பல விமர்சனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீது முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கது. ரணில் அரசாங்கத்துடனான பேச்சுத் தொடர்பில் அவதானம் தேவை. சரணாகதி அடையாமல் பேச்சை முன்னெடுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதனைப் பொது அமைப்புகளும், ஊடகங்களும் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தன. அதற்குச் செவிசாய்ப்பது போலவே, இப்போது கூட்டமைப்பு 'பேச்சில் முன்னேற்றமில்லை எனில், செயலில் நல்லெண்ணத்தைக் காட்டாவிடில் பேச்சை முறித்துக் கொள்வோம்' என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது எடுத்துள்ள நிலைப்பாட்டிலிருந்து நழுவவோ – வழுவவோ கூடாது. இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கவேண்டும். அரசாங்கத்தின் சாக்குப்போக்கு –பசப்பு வார்த்தைகளை நம்பி தங்களது உறுதிப்பாட்டிலிருந்து தளம்பக் கூடாது.

இந்த இடத்தில் கடந்த காலத்தில் கூட்டமைப்பின் தலைமை குறிப்பாக சம்பந்தன் –சுமந்திரன் இணை விட்ட தவறுகளையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முழுமையாக நம்பி – ஏனைய தரப்புக்கள் கூறுவதை கொஞ்சம் கூட கேளாமல் ரணிலின் பின்னால் கண்மூடித்தனமாகச் சென்றார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு பலத்த பின்னடைவைச் சந்தித்த பின்னரும், ரணில் மீது நம்பிக்கை வைத்து கூட்டமைப்பின் தலைமை செயலாற்றியது. புதிய அரசமைப்பு வரும் என்று நம்பிச் செய்யவேண்டிய விடயங்களைக் கூட கூட்டமைப்பு செய்யாது விட்டது. இதை ஏனைய தரப்புக்கள் சுட்டிக்காட்டியபோது கூட்டமைப்பினர், அவர்களை எள்ளி நகையாடிய நிகழ்வுகளும் நடந்தேறின. ஆனால் வரலாறே வழிகாட்டி என்பதைப்போல, கடந்த காலங்களிலிருந்து கூட்டமைப்பினர் பாடங்களைக் கற்றுத் தேர்ந்து விட்டார்கள் என்று நம்புவதா அல்லது அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்குவேட்டைக்காக மீண்டும் இத்தகைய அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள் என்று எண்ணுவதா என்பது தெரியவில்லை. தேர்தலுக்கானதுதான் இவர்களது நாடகம் என்றால் இதன் பின்னர் கூட்டமைப்புக்கான அரசியல் எதிர்காலம் என்பது சூனியமே. அதற்காகத்தான் இப்படிச் செய்கின்றார்கள் என்றால் தங்களுக்குத்தாங்களே புதைகுழியைத் தோண்டுகின்றார்கள் என்றுதான் அர்த்தம். கடந்த கால அனுபவங்களிலிருந்து தங்களது நகர்வுகளை தந்திரமாக முன்னெடுக்கிறார்கள் என்றால் நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நன்மை கிட்டும். அது கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலத்துக்கும் சிறப்பானதாக அமையும். கூட்டமைப்பின் இப்போதைய நிலைப்பாடு காலத்திடமிருந்து கற்றுக்கொண்ட படிப்பா? அல்லது தேர்தலுக்கான நடிப்பா? என்ற உண்மை இன்னும் சில நாள்களில் அவர்களின் நடவடிக்கைகளில் இருந்து தெரியவரத்தானே போகின்றது.



# போலி தலதா மாளிகை குருநாகலில் நிர்மாணம்

*விசாரணைக்கு பணிப்பு*

கொழும்பு, ஜன 7

குருநாகல் மாவட்டத்தில் போலி தலதா மாளிகை நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

போலி தலதா மாளிகை நிர்மாணம் தொடர்பில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகளால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

ஏற்கனவே பல உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் போலி தலதா மாளிகைக்கு நன்கொடையளித்து ஏமாந்துள்ளனர் என ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

(ச-இ)

# அதிகாரப் பகிர்வுக்கான பேச்சில் நம்பிக்கை இன்றியே பங்கேற்பு

*சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 7

குறுகிய காலத்துக்குள் அரசியல் தீர்வு வழங்க முற்பட்டுள்ள அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சில் நம்பிக்கையின்மையுடனேயே நாம் பங்கேற்கிறோம்- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நாடாளுமன்றில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பலவருடங்களாக இனப்பிரச்சினைக்குக் கிடைக்காத தீர்வை எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்துக்குள் அதாவது ஒரு மாத காலத்துக்குள் கிடைக்குமா? என பல்வேறு தரப்பினர் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இந்தப் பேச்சில் நம்பிக்கையின்றியே நாம் கலந்துகொள்கிறோம். அதனை அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

தீர்வுத் திட்ட விவகாரத்தில் கூட்டமைப்பு பங்குகொள்ளவில்லை என்ற பழிச்சொல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். அதனால்தான் பேச்சில் பங்கேற்கின்றோம்.

வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம். அந்தக் கால எல்லைக்குள் தீர்வை பெற்றுக் கொடுக்காவிட்டால் அதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும்.

அரசியல் தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு தமிழர்களை ஏமாற்றும் வகையில் சர்வதேசத்தின் கண்களுக்கு மண்ணை தூவினால் அது அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

குறுகிய காலத்துக்குள் அரசியல் தீர்வு வழங்க முடியாது என்பதை அறிந்து கொண்டு எம்மையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் வகையில் அரசு செயற்பட்டால் தமிழ் மக்களை ஒன்றுத்திரட்டிப் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (ச-இ)

நாளை

08.01.2023

ஞாயிற்றுக்கிழமை

மார்கழி 24


சுபநேரம் : 09.32 - 11.02

ராகுகாலம் : 05.02 - 06.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# மரண அறிவித்தல்



## திரு.சிவகுரு சிவகுமார்

**(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், Mascons (PVT) Limited-ஈவினை)**

நவாலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவகுமார் அவர்கள் நேற்று (06.01.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதாதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவகஜன் (சட்டத் துறை மாணவன், யாழ். பல்கலைக்கழகம், 2019 A/L JHC), சிவசொரூபன் (2020 A/L JHC) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசரவணபவன் (டென்மார்க்), சிவபாக்கியம், சிவனேஸ்வரி, சிவயோகம், ஆ.சுதாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாலன், தேவமனோகரி மற்றும் காலஞ்சென்ற அரசரத்தினம், கணேசலிங்கம், பாலாமணி, சாவித்திரிதேவி, லோகேஸ்வரன், லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ரஜீபனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நெடுந்தீவு பிரதேச சபை) மாமனாரும், கபிலன் (டென்மார்க்), மிதுலா (டென்மார்க்), கனிபன் (டென்மார்க்) ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி, ஆரயம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**நவாலி வடக்கு, மானிப்பாய்.**
**தொடர்பு: 075 717 5447**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22672) 1/6

# என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்....

**18ஆம் ஆண்டு** **03ஆம் ஆண்டு**





அமரர்
## முருகேசு தாமோதரம்பிள்ளை
**(இளைப்பாறிய ஆசிரியர்)**
**தோற்றம் :- 13.01.1932**
**மறைவு :- 16.12.2005**
**திதி:- அபரபக்கபிரதமை(07.01.2023)**

அமரர் திருமதி
## தாமோதரம்பிள்ளை நவநீதம்
**(இளைப்பாறிய அதிபர்)**
**தோற்றம் :- 07.07.1932**
**மறைவு :- 13.01.2020**
**திதி:- அபரபக்க சதுர்த்தி (10.01.2023)**

எம் அன்புத் தெய்வங்களே! அம்மா! அப்பா!
எமை வளர்த்து ஆளாக்கி நல்ல நிலைக்குக் கொண்டு வந்தீர்கள்
அன்புடனும் பாசத்துடனும் எமை வளர்த்து தவிக்கவிட்டுப் பிரிந்தீர்கள்!
என்றும் உங்கள் நினைவுடன் உமை எண்ணி வாழ்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

**"கோகுலம்"**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

அன்பு
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனி, தங்கை.**

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி


**இகத்தில்** **21.05.1953** — **விண்ணில்** **28.12.2012**

## அமரர்
## தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

**(பிரபல தர்ம்சன்ஸ் கட்டட ஒப்பந்தகாரரும் உரிமையாளரும்)**

**திதி : அபரபக்க பிரதமை**





எங்களை விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டதே அப்பா!
அன்பினை விதைத்து அறிவை வளர்த்த எங்கள் அப்பாவே!
கண்கண்ட தெய்வமாக கண்ணை இமை காப்பது போல் காத்தீரே
அதனை நினைத்து உங்களை நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம் அப்பா!
வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து
பத்து ஆண்டுகளாக தவிக்கின்றோம் அப்பா!
மீண்டும் எம்மிடம் புது உறவு பெற்று வர மாட்டீர்களோ என ஏங்குகின்றோம் அப்பா!
எம்மை தனியே விடாமல் உங்களுடனே அழைத்துச் சென்று
முன்னேற வழி வகுத்தீர்களே அப்பா!
ஆண்டவன் அடியில் அமரருள் ஒருவரானீரோ என ஆறுதல் கொள்கிறோம் அப்பா!
உங்கள் குல தெய்வமாக தொண்டு புரிந்த ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமானும்
மகாமாரி அம்மனும் நீங்கள் நினைத்தது போல எங்களுக்கு வழிகாட்டியாக
இருப்பார்கள் என்ற உறுதியுடன் வாழ்கின்றோம் அப்பா!
பத்து ஆண்டுகள் இல்லை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை என்றும் நினைத்து பூஜிப்போம் அப்பா!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

உங்கள் பிரிவால் வாடும்...
**குடும்பத்தினர்.**

**இல. 11, கதிரவேல் ஒழுங்கை,**
**கனகரட்னம் வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

(CS 48475) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
11 . 02 . 1977



இறப்பு
02 . 01 . 2018

திதி:- பிரதமை
(07.01.2023)

கடந்த 02.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் இந்திரசித்து விக்கினேஸ்வரன்
(லலிதா ஜுவல்லரி)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்க விட்டு
ஐந்தாண்டுகள் சென்று விட்டன.
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் – நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

42/2, கடையிற் சுவாமி கோவில்வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CR 38936)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 03 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு

### கனகரத்தினம் தவநாதன் (J.P)

(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி)

அன்னை மடியில் 24.09.1948

ஆண்டவன் அடியில் 11.01.2020

திதி:- பிரதமை
07.01.2023 (சனிக்கிழமை)

ஆலமரமாய் அரவணைத்து அன்போடு அறிவூட்டிய ஆருயிர் தெய்வமே அப்பா!
வேரோடி விழுது விட்ட பெரு விருட்சமே எமை பாரோடு தவிக்க விட்டு பாதியிலே
போனதேனோ வானத்து நிலவாய் வலம் வந்து அரும்பணியாற்றிய அற்புதமே.
இப்பிறவியில் அல்ல எப்பிறவியிலும் யாம் காணோம் உமைப் போன்ற அருமருந்தை
எம் உயிரான உயிர்ப்பூவே
நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே அன்பானவரே
உங்கள் பெயரும் விளங்கும்!!
அகிலத்திற்கு அதிபதி ஆதி சிவன்
அன்பு உள்ளத்திற்கு அதிபதி அப்பா
எங்கள் மனமெல்லாம் தங்களின்
தங்கமான நல்வாசம் வீசிட
விரைந்த உங்கள் ஆத்மா நன்னிலை
எல்லாம் பெற்று தில்லைக் கூத்தன்
திருவருளால் திருவடி அடைய சிந்தையால் சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.!

ஈர விழிகளுடன் மூன்றாண்டுகள் சென்றுவிட்டது மூன்றாண்டென்ன மூவாயிரம்
ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுதான் எங்கள் நினைவு

உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!!

இங்ஙனம்
மனைவி, மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரர் - க.தவலிங்கம்.
077 559 9515

இல.292, D.S. சேனநாயக்க வீதி,
கண்டி.

(CS/48476)

## 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 . 09 . 1956

இறப்பு 07 . 01 . 2020

அமரர்

### திருமதி மார்க்கண்டு சந்திராதேவி (தேவி)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர்
அனைவரும் போற்ற வாழ்ந்து காட்டிய அன்னையே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக்கொண்டிருக்கும் குலவிளக்கே - அம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டுப் பிரியாது.

தவசிகுளம், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்.

(CR/ 38684)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07.04.1947

இறப்பு 19.12.2021



### திரு.கனகரத்தினம் கேசவன்

(சிரேஷ்ட சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், சமாதான நீதவானும் உத்தியோகபூர்வமற்ற நீதவானும், அரச சட்டத்தரணியும், யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்க முன்னாள் செயலாளரும், உபதலைவரும், யாழ். நீதிமன்ற பதில் நீதவானும், முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரியும், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் பேரவை உறுப்பினரும், சங்கிலியன் மன்ற மூத்த உறுப்பினரும், முன்னாள் தலைவரும், யாழ். பரியோவன் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும், யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் (JSAC) முன்னாள் உபதலைவரும்)

**இமைப்பொழுதும் எம் நெஞ்சில்**

மாதவமான கேசவா! என்றே
மானிலம் போற்றிடும்
பெருவாழ்வு கண்டீர்கள்!
யாவர்க்கும் நீதிசெய்யும்
நியாயமனத்தினால் நிமிர்ந்தீர்கள்!

பேர்சொல்லும்படியான
வாழ்வினை எமதாக்கி
வானுறையும் தெய்வமாகி
வருடம் ஒன்றும் ஆனது - எம்
நெஞ்சத்தவிப்பு தணிவதில்லை

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
நீங்காத எம் அப்பா!,
சாந்தி பெறுக! சாந்தி தருக!!

**என்றும் நீங்கா நினைவுடன் வாழும்...**
**சிவமலர் கேசவன்,**
**Dr. கேசவன் மயூரதன்** (America) - **Dr. இந்துஷி** (America)
**Dr. கேசவன் சஜீவன்** (Australia) - **Dr. பிரபாக்ஷினி** (Australia),
**மேனகா ஜீவதர்க்ஷன் (சட்டத்தரணி) - ஜீவதர்ஷன் (முகாமையாளர்),**
**துளசிகா சரவணன் (சட்டத்தரணி) – சரவணன் (சட்டத்தரணி),**
**அதித்தி, ராகவ், பைரவி, மானுஷி.**

(CS 22665) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையற்ற எதிர்காலத்தை புலரச் செய்ய இணைவோம்

## அகில இலங்கை இந்துமாமன்றம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 7

எமது இளைய சமுதாயம் போதைப்பொருள் பாவனையால் சின்னாபின்னமாகிச் சீரழிந்து கொண்டிருப்பதை தடுத்து அவர்களை நேர்வழிப்படுத்துவது இந்துமாமன்றங்களது வகிபங்கு என அகில இலங்கை இந்துமாமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட செய்தியறிக்கையில் உள்ளதாவது:-

மாணவ சமுதாயம் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து மீண்டு வர வழிவகை தெரியாது அல்லலுறுகின்றனர். தீயசக்திகளானது இளைய தலைமுறையினரை குறிவைத்து போதைப்பொருளை விநியோகித்து அவர்களது பலவீனத்தை தமது பலமாக்குகின்றன.

போதையின் கோரத்தாண்டவம் கொலை, களவு உள்ளிட்ட பாதக செயல்களுக்கு வழிவகுக்கின்றன. இதனால் இளையோர் சவால்களை எதிர்கொள்ளத் தயங்குபவர்களாகவும், விரக்தி மனப்பான்மை கொண்டவர்களாகவும் சமய நம்பிக்கை அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்கத் தலைப்பட்டு எதிர்காலத்தை இழக்கின்றனர். ஏமாறுபவனும் ஏமாற்றப்படுவோரும் இருந்தால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

ஆக, மாணவர்களிடைய சமய நம்பிக்கையை வளர்த்து அவர்களை தீயபழக்கவழக்கங்களில் சிக்காது மீட்டெடுக்க இந்துமாமன்றங்கள் தமது வகிபங்கை செலுத்தவேண்டும்.

தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க சில வேளைகளில் பாடசாலைகளில் நிதி வசதியில்லாதிருக்கலாம். அதற்கு உங்கள் அமைப்பினூடாகவோ அல்லது நலன்விரும்பிகளிடமிருந்தோ வர்த்தக பிரமுகர்களிடமிருந்தோ பெற்று அவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள்.

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான குறும்படம், நாடகம் என்பவற்றைத் தயாரித்து மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் காட்சிப்படுத்துங்கள்.

போதைப் பொருள் தொடர்பான தெருக்கூத்துக்களை ஏற்பாடு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இத்தகு சமூக விரோதிகளின் சதித் திட்டங்களில் இளம் சமுதாயம் சிக்குவதை முறியடித்து போதையற்ற ஒளிமயமான எதிர்காலத்தைப் புலர வைக்க முடியும் - என்றுள்ளது. (ச)


## முதலாம் ஆண்டு நினைவு

அமரர் திரு. பொன்னம்பலம் சிவசோதிலிங்கம்



(தேவன்)

(ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர் - காங்கேசன்துறை)

தோற்றம் 04.07.1955

மறைவு 19.12.2021

ஆண்டு ஒன்று ஆயிடினும்
அன்புமுகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/22660) குடும்பத்தினர்


## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் நிர்வாகத்தெரிவு

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தெரிவு, சம்மேளன அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவில், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவராக சிறிகந்தவேல் புனித பிரகாஸ் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார், செயலாளராக யூலியன் சகாயராசா, பொருளாளராக தங்கவேல் தங்கரூபன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக குணரட்ணம் குணராஜன், செபமாலை அன்ரன் செபராசா, சரவணபவானந்தன் சிவகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-14-20)



## இளையோருக்கான தொழிற்பயிற்சி முல்லைத்தீவில் ஆரம்பித்து வைப்பு

முல்லைத்தீவு, ஜன. 7

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய 3 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச்செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தொழிற்பயிற்சி அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு தொழிற்பயிற்சி தொடர்பான விளக்கவுரையை வழங்கினர். அதனைத் தொடர்ந்து தொழிற்பயிற்சி தொடர்பான ஒளித்தொகுப்பும் திரையிடப்பட்டது.

மேலும் கடந்த வருடம் தாதிய உதவியாளர், மருந்தக உதவியாளர், கள உதவியாளர் (விவசாயம்), நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர், மோட்டார் வாகன திருத்துநர், மரவேலை கைவினைஞர் (கட்டடம்) ஆகிய துறைகளில் தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான என்.வி.கியூ தரச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆரம்பிக்கப்படவுள்ள புதிய பயிற்சித் திட்டத்தில் கள உதவியாளர் (விவசாயம்), நீர்க்குழாய் பொருத்துநர், மின்னியல் வல்லுநர், பராமரிப்பாளர் (குழந்தை மற்றும் முதியோர்), வாகன சேவையாளர் மற்றும் உள்ளக சுத்திகரிப்பாளர் ஆகிய பிரதான 5 துறைகளில் தலா 25 பேர் விகிதம் இணைக்கப்பட்டு பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஒ-14)

## தொழில் கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 7

இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் முதலாம் கல்வியாண்டில் தொழிற்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல்வள முகாமைத்து டிப்ளோமா, கடலுணவு தொழில்நுட்ப டிப்ளோமா, நீரியல் வளர்ப்பு தொழில்நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, சுழியோடி, உயிர்பாதுகாப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், அலங்கார மீன்வளர்ப்பும் முகாமைத்துவமும், நீச்சல் பயிற்சி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும், தொழில்சார் ஆங்கில கற்கைநெறிக்கான தேசிய சான்றிதழ் ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரத்துக்கு தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வமுடையவர்களுக்கு இந்தக் கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்வோர் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகமைச் சான்றிதழ் வழங்கப்படும். கற்கவிரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)



## முல்லையில் இருவருக்கு பதிவாளர் நியமனங்கள்

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவுகளுக்கான தமிழ் மொழி மூலமான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கான நியமனக்கடிதங்கள் கடந்த திங்கட்கிழமை இருவருக்கு வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடுப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளராக வீரகத்திப்பிள்ளை விதுரன், கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கரிக்கட்டுமூலை தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளராக தோமஸ் டெனி ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்களை முல்லைத்தீவு மாவட்டச்செயலர் க.விமலநாதன் வழங்கினார்.

நிகழ்வில் மேலதிக மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன், காணி மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன், மேலதிக மாவட்டப் பதிவாளர் ஏ.றெளசி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா போன்று ரணிலும் பதவி துறந்து ஓட நேரிடும்!

## ஹேஷா விதானகே தெரிவிப்பு

கோத்தாபய ராஜபக்சவைப் போல் மிக மோசமான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கோத்தாவைப் போல் ரணிலும் விரைவில் பதவி துறந்து ஓடுவார். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதேசசபை உறுப்பினராக ஆவதற்குக்கூட முடியாமல் இருந்தவர். நாட்டைச் சீரழித்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அப்படிப்பட்ட ரணிலை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

ரணிலைச் சிறைக்கு அனுப்பும் வரை நித்திரை கொள்ளமாட்டோம் என்று சொன்னவர்கள் இன்று ரணில்தான் சரியான தலைவர் என்கின்றார்கள். அவர்கள்தான் ரணிலை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள். மஹிந்த கோத்தா ஆகியோர் பதவிகளைத் துறந்து ஓடி ஒளிந்துகொண்டபோது அவர்களுடன் சேர்ந்து ஒளிந்துகொண்ட 'மொட்டு'க் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் வீதிக்கு இறங்குவதற்கு வழியமைத்துக் கொடுத்தவர் இந்த ரணில். அதனால்தான் அவரைப் புகழ்ந்து பேசுகின்றார்கள் இவர்கள். அவர் மக்களின் போராட்டங்களை, பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவரது விருப்பத்தின்படி மிக மோசமான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்கின்றார். கோத்தாவைப் போல்தான் ரணிலின் ஆட்சியும் இருக்கின்றது. எனவே, கோத்தாவைப் போல் ரணிலும் விரைவில் பதவி துறந்து ஓடுவார் - என்றார்.

(எ-22)


### கார் விற்பனைக்கு

NISSAN MARCH (K 12)
2011 Registered
KN - XXXX
3.35 மில்லியன் (CS/22666)

தொ.பே :- 077 373 4109



### நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் அரச உத்தியோகம், அரசசார்பற்ற மணமக்களுக்கு உள்நாட்டு, வெளிநாடு எவ்வகையாயினும் எல்லாவித மணமக்களும் உண்டு.
ஆண் ( V ) இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த
சூரியன்
செவ்வாய் } 06ஆம் வீட்டில் உள்ள
அரச உத்தியோகமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
(பெண் வீட்டார் மட்டும் தொடர்புகொள்ளவும்).

வி.ஜெயந்தி தொடர்பு: 077 973 3183

(CS 22673)1-6



# A/L-ICT

**மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்**

* க.பொ.த.(உ/த) பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற சகல பிரிவு மாணவர்களுக்குமான எதிர்பார்க்கப் படும் MCQ, Structure வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ள முடியும்.
* விலை : 100 ரூபா

கிடைக்குமிடம்:
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### புதிய நிர்வாகக் குழுத் தெரிவு 2023 - 2024

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவிற்கான (2023-2024) வேட்புமனு தேர்தல் குழுவினால் கோரப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகக் குழுவிற்கான வேட்புமனுப் பத்திரங்களையும், மேலதிக விபரங்களையும் எமது **www.jhcobajaffna.com** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வேட்புமனு தாக்கலுக்கான இறுதித் திகதி : 20.01.2023**

**மருத்துவர் கோ.றஜீவ்**
செயலாளர் 06.01.2023


முதல் வருடம் மொரிஸியஸ்
இரண்டாம் வருடம் பிரான்ஸ்
Open University of Mauritius (Public University)
சிறப்பு புலமைப்பரிசில்
STUDY IN MAURITIUS
2ND YEAR TRANSFER UK
FRANCE & MALTA
NO- IELTS / INTERVIEW
VISA WITH IN 4 WEEK

GET IN TOUCH
077 390 0161
075 025 2141
ஜனவரி 07&08
யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்
SIG Scholars information global



Land for Sale
Jaffna -Town
காணி விற்பனைக்கு
யாழ் நகரில்
காணி ( 1/2 பரப்பும் 1 குழியும் )
241, ஸ்டேன்லி வீதியில் கடையுடன்
Stanley Road - With Shop
4 Crore
(ரெயில்வே பாதைக்கும் பழைய வெலிங்டன் தியேட்டருக்கும் இடையே)
077 3 900 161
071 5 346 640 076 8 446 506


## மரண அறிவித்தல்



### சிங்கராயர் பீற்றர்

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் பீற்றர் கடந்த (05.01.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா சிங்கராயர் மற்றும் விக்ரோரியா சிங்கராயர் (ரெட்டினம்) ஆகியோரின் அன்பு மகனும், ரோஸ் லீமாவின் (ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முன்னாள் தட்டெழுத்தாளர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற மேரி நீற்ரா சூசைப்பிள்ளை (சிங்கம்), மெற்றில்டா துரைரட்டினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் ஜோன் துரைரட்டினம், காலஞ்சென்ற நீற்ரா அன்ரனிப்பிள்ளை, ஜேம்ஸ் மரியதாஸ், ஜூலினா மற்றும் விக்ரர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமார், நிகார், டக்ளஸ் நிஜந்தன், நான்சி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு பின் கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி
மற்றும் சகோதரர்கள்

தொடர்புகளுக்கு:
077 448 5848

(CS 22674) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 05 . 1940



இறப்பு 06 . 01 . 2023

### சுப்பிரமணியம் அருளம்மா

யாழ்.வாதரவத்தையை பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதி, 02ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருளம்மா நேற்று (06.01.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஞானேஸ்வரி, காலஞ்சென்ற இராசம்மா, மகேஸ்வரி (கனடா), அருமலர், வேலுமயிலும், காலஞ்சென்ற அல்லிமலர், காலஞ்சென்ற திரவியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், துவாரகாதேவி (லண்டன்), ஜெகநாதன் (ஜெகன் போட்டோ-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மோகநாதன், யசோதரா (லண்டன்), காலஞ்சென்ற சுபலதா, சத்தியநாதன் (பிரான்ஸ்), சிவலோகநாதன் (குட்டி சிவில் பாதுகாப்பு திணைக்களம் - முல்லைத்தீவு), குகநேசன் (லண்டன்), மகிழ்நேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவசாமி, லலிதாம்பிகை, அன்ரன், பிறேமகுமார் றட்ணம், இசையினி (பிரான்ஸ்), சித்திரா, றஜித்தா (லண்டன்), சுஜித்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சிவசாயி, சாம்டானியல் (UK), பரணீதரன், பைரவி, அனுராகவி, அன்ரன் வினோத்குமார் (பிரான்ஸ்), டனுசாயினி, அபிநயா, சஞ்சீவன், ஸ்ரேயா (லண்டன்), அஸ்வின் (லண்டன்), அபிசன் (லண்டன்), சாகித் (லண்டன்), ஆஷிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டனிஸ் (லண்டன்), டேனி (லண்டன்), டேனீஸ் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

30/18, மூத்த விநாயகர் வீதி,
2ஆம் ஒழுங்கை,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
ஜெகன் - 0777 666 746
குட்டி - 077 3073 490

(CS 22678) 1/6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தர் ஐக்கிய மக்கள் சக்தியில்!

வவுனியா, ஜன. 7

ஈ.பி.டி.பி. கட்சியின் வவுனியா மாவட்ட உதவிப் பொறுப்பாளர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

வவுனியாவுக்கு நேற்று வருகைதந்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண முன்னிலையில் அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்ததுடன், உள்ளூராட்சிமன்ற வேட்பாளராகவும் அறிமுகமானார். (அ-ம)

காணிமோசடி வழக்கு

# மூன்று நொத்தாரிசுகளிடம் விரைவில் விசாரணைகள்!

யாழ்ப்பாணத்தில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணியை பிணையில் விடுவிக்க பொலிஸார் ஆட்சேபம் தெரிவித்ததுடன், இது தொடர்பில் மேலும் மூன்று நொத்தாரிசுகளிடம் விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்ட உறுதியினால் காணி மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கைத் தொடுத்து பிரசித்த நொத்தாரிஸ் உள்ளிட்ட ஒன்பது பேரை கைதுசெய்தனர். அவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது விளக்கமறியலில் உள்ள பிரசித்த நொத்தாரிசை பிணை யில் விடுவிக்கவேண்டும் என்று அவர் தரப்புச் சட்டத்தரணி கோரிக்கையை முன்வைத்தார். இதற்கு பொலிஸார் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் இன்னும் மூன்று நொத்தாரிசுகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் அதனால் குறித்த நொந்தாரிசை பிணையில் விடுவிக்கக்கூடாது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## கூட்டமைப்பின்...

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் கூட்டமைப்பு அதிருப்தியை வெளியிட்டுள்ளமை தொடர்பில் பிரதமரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சிக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது. இந்த முதலாவது அமர்வில் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றை வழங்கவேண்டும் என்பதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக அடுத்த சர்வகட்சிப் பேச்சு எதிர்வரும் 10, 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. இந்த இரண்டாம்கட்டப் பேச்சுக்கு முன்னர் ஒரு முன்னேற்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதர விடயங்கள் தொடர்பிலும் அவர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. இந்த முன்மொழிவுகளுக்கு அமைய அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறும். ஆதலால், கூட்டமைப்பின் தற்போதைய அதிருப்தி நிலையை ஏற்க முடியாது. ஏனெனில், சர்வகட்சிக் கூட்டமானது அதன் சரியான திசையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது - என்றார். (அ-ம-22)

## வேறுபட்ட...

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இந்தச் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டபோது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நான்கு நிலைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். இதையடுத்தே, 'தேர்தல் தொடர்பில் சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நான்கு நிலைப்பாடுகளை விடுத்து அனைவரும் பெரும்பான்மைத் தீர்மானத்துக்கு அமைய ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதற்குத் தடையேதும் கிடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலை நடத்தும் திகதி அறிவிப்பு தொடர்பில் ஆணைக்குழுவுக்குள் இருவேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. நிதி ஒதுக்கீடு தொடர்பில் நிதியமைச்சுடன் உத்தியோகபூர்வமான பேச்சுக்களை மேற்கொண்டதன் பின்னர் தேர்தல் தொடர்பில் ஒரு தீர்மானத்தை எடுப்போம் என ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருசிலர் தமது நிலைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். இதனால் தேர்தல் தொடர்பில் ஆணைக்குழுவுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம)

## மூன்று...

பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த மூன்று தினங்களுக்குக் கடும் மழைக்கு வாய்ப்புள்ளது. வடக்கில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க மழை வீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்பு அதிகம். யாழ்ப்பாணத்தில் உயரமுத்த காற்றின் தாக்கம் காணப்படுகிறது. இதனால், மிதமான மழை வீழ்ச்சியே கிடைக்கும். கிழக்கு மாகாணத்தில் கடும் மழைவீழ்ச்சி கிடைக்கும் - என்றுள்ளது. (அ-ம)

## இந்திய...

இதுவே முதல்முறையாகும். நெருக்கடியான காலகட்டத்தில், இந்தியா ஏற்கனவே 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி, கடன்கள், கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல் மற்றும் நாணய மாற்று ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இந்தநிலையில் புதுவருடத்தில் இந்தியாவிலிருந்து வரும் முதல் உயர் மட்ட வருகையாக ஜெய்சங்கரின் வருகை அமைந்துள்ளது. (அ-ம)

## ஜெலி...

திகதி சென்றுள்ளார். இதன்போதே அவர் ஜெலி மீனால் தாக்கப்பட்டுள்ளார். இதையடுத்து தொடர்ந்து 20 நாள்கள் சிகிச்சை பெற்றுவந்த அவர் வீட்டுக்குச் சென்றுள்ளார். வீட்டிலும் உடல்நிலை முழுமையாகக் குணமடையாமல் வேலைக்குச் செல்லாமல் ஓய்வில் இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுக் காலை உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழ்...

இயக்குநரைத் தவிர ஏனையோர் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உரையாடியிருந்தனர். நிகழ்வை நடத்திய திரைப்பட விழாவின் ஒருங்கிணைப்பாளரும், இயக்குநருமான அனோமா ராஜகருணா ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடியிருந்தார். இது தொடர்பில் பார்வையாளர் ஒருவர், 'இங்கே தமிழர்களே அதிகளவில் உள்ளனர். மொழிபெயர்ப்பும் செய்யப்படவில்லை. கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளவர்களும் தமிழ்மொழி பேசத் தெரிந்தவர்களாக உள்ளபோது ஏன் ஆங்கிலத்தில் உரையாடல் இருக்கவேண்டும்?' எனக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் அளித்த இயக்குநர் அனோமா, 'இது சர்வதேசத் திரைப்பட விழா. அதனால் ஆங்கிலத்தில் உரையாடுவோம்' என்ற சாரப்பட பதில் அளித்தார்.

இதையடுத்து பார்வையாளர் ஒருவர், 'சர்தேசத் திரைப்பட விழாவாக இருந்தாலும், யாழ்ப்பாணத்தைப் பிரதி பலிக்கும் படங்கள் மற்றும் 'யாழ்' இசைக்கருவி என்பவற்றை இலச்சினையாக விளம்பரப்படுத்தி 'யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா' என்று யாழ்ப்பாணத்தில் நடத்தும்போது, தமிழ் மொழியை புறக்கணிப்பது போன்று நடந்து கொள்வதுடன், ஏன் தமிழ் மொழியில் உரையாடல் நடத்தவில்லை? எனக் கேட்டமைக்கு, 'இது சர்வதேச திரைப்பட விழா, அதானல் ஆங்கிலத்திலேயே கதைப்போம் என பதில் அளித்து தமிழ் மொழியைக் கேவலப்படுத்தியமை கண்டனத்துக்கு உரியது' என தனது கண்டனத்தைப் பதிவுசெய்தார்.

அதேவேளை மற்றுமொரு பார்வையாளர், திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வை அடுத்து திரையிடப்பட்ட சிங்கள மொழித் திரைப்படத்தில், பேருந்தில் பயணிக்கும் தமிழ்க் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் இராணுவ சீருடையை ஒத்த சீருடை அணிந்து கையில் விளையாட்டுத் துப்பாக்கியுடன் பயணிப்பது போன்றதொரு காட்சி இருந்தது. தமிழ் மக்களைத் தவறாகச் சித்திரிக்கும் இந்தப்படங்களை திரையிடுவதன் பின்னால் ஒரு திட்டமிட்ட அரசியல் உள்ளது. கடந்த முறை யாழில் இருந்து முஸ்லிம்களின் வெளியேற்றம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட படம் குறித்து விமர்சனங்களை நான் முன்வைத்தேன். அப்போது என்னைப் 'புலியின் வால்' என்று கேலி செய்து, எனது கருத்தை தெரிவிக்கவிடாமல் தடுக்கப்பட்டேன்' என இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான நாடுகளில் நடைபெறும் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் ஆங்கிலமொழியோடு குறித்த நாடு அல்லது பிரதேசத்துக்கான மொழியும் பயன்படுத்தப்படுகையில், யாழ்ப்பாணம் சர்வதேசத் திரைப்பட விழாவில் மட்டும் தொடர்ச்சியாக ஆங்கில மொழி மட்டுமே பயன்படுத்தப்படுவதோடு, தமிழ்மொழி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20)

## முன்னிலை...

வதற்குத் திட்டமிட்டுள்ளனர். ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பங்கேற்ற தரப்புகளில் முன்னிலை சோஷலிசக் கட்சி பிரதான இடத்தை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மயங்கி...

உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி இவர் சமுர்த்தி வங்கிக்குச் சென்றுவிட்டு தனது உறவினருடன் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார். இவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும், சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்கள்



தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிந்த 200 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக கோண்டாவில் வாழ் புலம்பெயர் மக்களின் நிதிப் பங்களிப்பில் கோண்டாவில், திருநெல்வேலி, கொக்குவில், உரும்பிராய், ஊரெழு, உடுவில், புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டன. செயற்றிட்டத்தில் இரண்டாம் கட்டமாக எதிர்வரும் சனிக்கிழமை மேலும் 100 குடும்பங்களுக்கு பொங்கல் பொதி வழங்கப்படவுள்ளது. (ஒ-14,66)

## வீரகத்தி விநாயகரில் திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 7

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் 25 வருட காலமாக இடம்பெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இந்த வருடமும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ச)

## தென்மராட்சி அதிபர் சங்க பணிநயப்பு விழா நாளை

சாவகச்சேரி, ஜன. 7

தென்மராட்சி அதிபர் சங்கத்தின் பணி நயப்பு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் சங்கத்தின் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாவில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய சி.பவளகுமாரன், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய கா.சோதிலிங்கம், கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய க.தேவநேசன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி ஜெ.சிறீபாஸ்கரன் ஆகியோருக்கு பணிநயப்பு இடம்பெறவுள்ளது. (ஒ-14,159)

## கணபதி ஹோமம்

சாவ., ஜன.7

மிருசுவில் உசன் கஜகேணி விநாயகர் ஆலய மகா கணபதி ஹோமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணக்கு இடம் பெறவுள்ளது. உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பிரபல்ய சிவாச்சாரியர்களின் பங்குபற்றுதலுடன் ஹோமம் இடம்பெறவுள்ளது. ஹோம வழிபாடுகள்காலை ஆரம்பமாகி விநாயகப் பெருமானுக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் திருவீதி யுலா வரவுள்ளார். அத்துடன் வழிபாட்டின் நிறைவில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14,9)


**முன்பள்ளி முதல் தரம் 1 - 5 வரையான வகுப்புக்களுக்கான**

தனிப்பட்ட வகுப்புக்கள்
குழு வகுப்புக்கள்
ஆங்கில வகுப்புக்கள்
மெல்லக் கற்போருக்கான வகுப்புக்கள்

ஆரம்பம் :- 2023.01.18 பி.ப. 4.00மணி
இடம் :- கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :- 076 115 0212

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 255 0807

**வேலைக்கு ஆள் தேவை**

நெல்லியடியில் அமைகின்ற உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலை, றைஸ் வேலை, சைனீஸ் மலேசியன் றைஸ், சூப் செய்யத் தெரிந்த பாஸ் தேவை.
**தங்குமிட வசதி மற்றும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.**

076 652 0414

**வேலையாட்கள் தேவை**

1) களஞ்சிய காப்பாளர்
2) கணக்கு பதிவாளர்
ஆண் / பெண்
22, மானிப்பாய் வீதி, மருதனார்மடம்,
076 6710 444

**உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் சந்தை**

**உழவர் திரு நாள் 2023 தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனை**
ஆட்டக்காரி **Rs. 223.00** கிலோ (10 கிலோ **Rs. 2230.00**)
ஆட்டக்காரி தீட்டல் **Rs. 220.00** கிலோ (பொங்கல் அரிசி)
மிளகாய் தூள் **Rs. 1800.00** கிலோ
வறுத்த சிவப்பு அரிசி மாவு **Rs. 370.00**கிலோ
(CS 22720/3/6)

**விற்பனைக்கு**

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.

தொடர்பு:- 077 843 5502
074 373 9982

**வேலை வாய்ப்பு**
**Customer Service Assistant**

யாழ்.நகரில் அமைந்துள்ள Lanka Tile காட்சியறைக்கு **Customer Service Assistant** ஆகப் பணியாற்ற ஓரளவு கணினி அறிவுள்ள இருபாலாரிடமும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.
**நேர்முகத் தேர்வுக்கு 11.01.2023 புதன்கிழமை 10 - 11 am வரை நேரடியாக சமுகமளிக்கவும்.**

**Lanka Tile Shows Room**
**469, K.K.S. Road, Jaffna.**
**(யாழ். சிவன் கோயில் அருகில்)**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது) ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம் 077 8147 389
077 2417 589

**தொண்டர் சபை பொதுக் கூட்டம் - 2023**

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் தொண்டர் சபை பொது கூட்டம் நாளை (08.01.2023) ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மணிமண்டபத்தில் நடைபெற உள்ளது.
எனவே அனைத்து தொண்டர்களையும் உரிய நேரத்துக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
செயலாளர்,
தொண்டர் சபை.

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 9865 457
077 0267 619




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org